

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.08.2023) தலைமைச் செயலகத்தில், வனத்துறை சார்பில் நீலகிரி மாவட்டம், தெப்பக்காடு யானைகள் முகாமில் முதல் பெண் காவடியாக (யானை பராமரிப்பாளர்) நியமிக்கப்பட்டுள்ள திருமதி வி.பெள்ளி அவர்களுக்கு பணி நியமன ஆணையினை வழங்கினார். இந்த நிகழ்வின்போது, வனத்துறை அமைச்சர் மரு.மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர். ரெட்டி, திருமதி பெள்ளி அவர்களின் கணவரும் யானை பராமரிப்பாளருமான பொம்மன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (2.8.2023) தலைமைச் செயலகத்தில், தடகள விளையாட்டு வீரர் டி.செல்வபிரபு, டிரிப்பிள் ஜம்ப் தடகள போட்டியில் 20–வது தேசிய ஜூனியர் ஃபெடரேஷன் கோப்பை 2022 போட்டியில் தங்கப் பதக்கம், 4–வது கேலோ இந்தியா இளைஞர் போட்டியில் தங்கப் பதக்கம், இருபது வயதிற்குட்பட்டோருக்கான உலக சாம்பியன்ஷிப் கலி கொலம்பியா 2022 போட்டியில் வெள்ளிப் பதக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்றதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, செல்வபிரபுவின் பெற்றோர் ஆகியோர் உள்ளனர்.

## கனடா நாட்டின், ஒட்டாவா மாகாணத்தில்

# கனடா அரசால் பராமரிக்கப்படும் ‘மேஜர் கில் பார்க்’ பூங்கா!

### வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பார்வையிட்டார்!

ஒட்டாவா (கனடா), ஆக. 3 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அரசு முறைப் பயணமாக 30.07.2023 அன்று கனடா நாட்டிற்கு வருகை தந்து, ஒட்டாவா மாகாணத்தில் கனடா அரசால் பராமரிக்கப்பட்டு வரும் மேஜர் கில் பார்க் பூங்காவைப் பார்வையிட்டார்.

அச்சமயம் பூங்காவில் உள்ள புராதனச் சின்னங்களின் விவரங்களையும் மற்றும் அங்கே பூங்கா பராமரிப்பில் எந்த வகையான இயந்திரங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன மற்றும் பூங்காவின் அமைப்பு, இந்தப் பூங்காவில் உள்ள பல்வேறு வகையான மரங்கள் மற்றும் பூச்செடி களின் விவரங்களையும் கேட்டறிந்தார்.

31.07.2023 அன்று கனடா நாட்டின் தலைநகரான ஒட்டாவா மாகாணத்தில் உள்ள இந்திய தூதரகத்திற்குச் சென்று, அங்கு கனடா நாட்டின் இந்திய தூதர் மேதகு சஞ்சய் குமார் வர்மா, கனடா நாட்டின் விவசாய வளங்களைப் பற்றியும், கனடா நாட்டில் பயன்படுத்தப்படும் உயரிய வேளாண் உற்பத்தி தொழில்நுட்பங்களையும் அங்கு அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களின் ஏற்றுமதி போன்றவற்றை அமைச்சர் அவர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் கனடா நாட்டிற்குச் சென்று பல்வேறு வேளாண் உத்திகளைக் கண்டறியும் வகையில் மாணவர்கள் பரிமாற்றம் தொடர்பாகவும், விவசாயிகளுக்கு தரமான உரம் விநியோகிக்கும் வகையில் ஆராய்ச்சி செய்வது தொடர்பாகவும், இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும், ஒட்டாவா மாகாணத்தில் கார்செனோபி கிராமத்திற்குச் சென்று, அங்கு சோயா, மொச்சை மற்றும் மக்காச்சோளம், கோதுமை, ஓட்ஸ் பயிர்களையும் மற்றும் பழவகைகள் பயிரிடுவதையும் பார்வையிட்டார்.

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர். பிருந்தா தேவி மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் வி. கீதாலட்சுமி மற்றும் வேளாண் பல்கலைக்கழக இயக்குநர்கள் உடன் இருந்தனர்.

# திருடப்பட்ட கோயில் சிலைகள் எத்தனை? அவற்றை மீட்க என்ன நடவடிக்கை?

## மக்களவையில் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 3 -

தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை கழகக் குழுத் துணைத் தலைவருமான கனிமொழி எம்.பி. மக்களவையில ஒன்றிய கலை மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சரிடம் நாடாளுமன்றத்தில் எழுத்துப்பூர்வமாக சில கேள்விகளைக் கேட்டிருந்தார்.

“இந்தியாவில் இருக்கும் கோயில்களில் இருந்து இதுவரை பழமையான எத்தனை சிலைகள் திருடப் பட்டுள்ளன, எத்தனை சிலைகள் மீட்கப்பட்டுள்ளன? தமிழ்நாடு உள்ளிட்ட அனைத்து மாநிலங்களில் இருந்தும் இதுகுறித்த கடந்த பத்தாண்டுகளின் விவரம் என்ன?

கோயில்களில் சிலை திருட்டு நடப்பதை தடுப்பதற்கு ஒன்றிய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

வெளிநாடுகளில் இருந்து இன்னும் மீட்கப்படாமல் இருக்கும் சிலைகள் எத்தனை? நாடு வாரியாக அதன் விவரங்கள் என்ன?

வெளிநாடுகளில் இருக்கும் கோயில் சிலைகளை மீட்பதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன?” ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எழுத்துப்பூர்வமாக கேட்டிருந்தார்.



இக்கேள்விகளுக்கு ஒன்றிய கலை, கலாச்சாரத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி ஜூலை 31ஆம் தேதி எழுத்துப் பூர்வமாக பதிலளித்தார்.

அதில், கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து கோயில் சிலைகள் திருட ப்பட்டது மற்றும் மீட்கப்பட்ட எண்ணிக்கை தொடர்பான பட்டியலை இணைத்திருந்தார்.

அதன்படி 2013 முதல் 2023 வரையிலான கடந்த பத்து ஆண்டுகளில் அதிகபட்சமாக கர்நாடக மாநிலத்தில் இருந்து 14 சிலைகள் திருடப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் மீட்கப்பட்டுள்ளது. ஆந்திராவில் 3 சிலைகள் திருடப்பட்டு 2 மீட்கப்பட்டுள் என. பிகார், ஒடிசா மாநிலங்களில் இருந்து 4 சிலைகள் திருடப்பட்டுள்ளன. இதுவரை அவற்றில் எதுவும் மீட்கப்படவில்லை. மேலும் தமிழ்நாட்டில் இருந்து கடந்த பத்து ஆண்டுகளில் எந்த கோயில் சிலையும் களவு போகவில்லை என்றும் அந்த பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒன்றிய கலை, கலாச்சாரத் துறை அமைச்சர் அளித்த பதிலில்,

“இந்திய தொல்லியல் துறை, சிலைகள் உள்ளிட்ட நமது பாரம்பரிய நினைவுச் சின்னங்களை பாதுகாப்பதில் உறுதியாக உள்ளது. அதன் அதிகார வரம்பிற்கு உட்பட்ட பழங்கால பொருட்களைப் பாதுகாப்பதில் தொல்லியல் துறையின் வழக்கமான ஊழியர்கள் தவிர தனியார் பாதுகாப்புப் படையினர், மாநில காவல்துறையின் ஆயுதக் காவலர்கள், மற்றும் தேவைக்கு ஏற்ப மத்திய தொழில் பாதுகாப்புப் படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஒருவேளை பழங்கால பொருட்கள் திருடப்பட்டதாக புகார் அளிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டால்... உடனடியாக லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டு, கஸ்டம்ஸ் உள்ளிட்ட சட்ட அமலாக்க நிறுவனங்கள் உஷார்படுத்தப்பட்டு, திருடப்பட்ட பழங்காலச் சின்னங்கள் வேறு எந்த வெளிநாட்டுக்கும் சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்யப்படுவது தடுக்கப்படுகிறது.

பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களான மொத்தம் 31 தொல் பொருட்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றில் 27 இன்னும் மீட்கப்பட வேண்டும். எனினும் அவை சட்ட விரோதமாக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக எந்த தகவலும் இல்லை. திருடிச் செல்லப்பட்ட பழங்காலச் சின்னங்களை மீட்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது.

இந்தியாவுக்கு வெளியே இது மாதிரியான நமது பழைய நினைவுச் சின்னங்கள் இருப்பதாக தகவல் கிடைக்கும்போதெல்லாம், தொல்லியல் துறை உடனடியாக சம்பந்தப்பட்ட நாடுகளின் இந்திய தூதரகங்களுடன் இந்த விஷயத்தை எடுத்துச் சென்று, அவற்றை மீட்டு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வகையில் நமது வெளியுறவுத் துறை மூலமாக 1976 முதல் 2023 வரை மொத்தம் 251 சிலைகள் உள்ளிட்ட பழமையான நினைவுச்சின்னங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த 251 இல், கடந்த 2014 முதல் 23 வரை மட்டுமே மீட்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் மொத்தம் 238 ஆகும்” என்று ஒன்றிய கலை, கலாச்சாரத் துறை அமைச்சர் கிஷன் ரெட்டி பதிலளித்துள்ளார்.

## திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு அடையாளமாய் விளங்கும்

# மானமிகு ஆசிரியரின் தொண்டு தொய்வின்றித் தொடரட்டும்!

### ‘தகைசால் தமிழர்’ விருது பெறும் கி.வீரமணியைப் பாராட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஆக. 3 -

தமிழ்நாட்டிற்கும் தமிழினத்திற்கும் பெரும் பங்காற்றி வரும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சுதந்திர தின விழாக் கொண்டாட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தகைசால் தமிழர்” விருது வழங்கி கௌரவிப்பார்கள் என, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள ‘ட்விட்டர்’ பதிவில், “திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு அடையாளமாய் விளங்கும் மானமிகு ஆசிரி யரின் தொண்டு தொய்வின்றித் தொடரட்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் அவர்களின் ‘ட்விட்டர்’ பதிவு வருமாறு:-

**தமிழ்நாடு அரசின் “தகைசால் தமிழர்” விருது பெற்றுள்ள மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்களை வாழ்த்துகிறேன். வணங்குகிறேன்.**



**பத்து வயதில் பகுத்தறிவு மேடையேறி எண்பது ஆண்டுகளாக இன எழுச்சிப் போர்முரசம் கொட்டி வரும் சுயமரியாதைச் சுடரொளி அவர்.**

**இனம், மொழி, நாடு மூன்றும் மூச்சென எந்நாளும் ஓய்வறியாமல் உழைத்துவரும் அவருக்கு, கலைஞர் 100இல் இந்த விருது வழங்குவதைத் தமிழ்நாடு அரசு பெருமையாய்க் கருதுகிறது.**

**திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு அடையாளமாய் விளங்கும் மானமிகு ஆசிரியரின் தொண்டு தொய்வின்றித் தொடரட்டும்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# பத்திரப்பதிவுத்துறையில் வசூல் சாதனை!

### வணிகவரி - பதிவுத்துறை அரசு செயலர் தகவல்!

சென்னை, ஆக. 3 -

தமிழ்நாடு பத்திரப் பதிவுத்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு சீர்திருத்தங்களின் விளைவாக இத்துறையின் மூலம் அரசுக்கு வரும் வருமானம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

பதிவுக்கு வரும் பொது மக்களுக்கான பதிவு வசதிகளை மேம்படுத்துதல், போலி பத்திரப்பதிவுகளைத் தடுக்கும் பல்வேறு முறைகளை அறிமுகப்படுத்தி பொதுமக்களுக்கு பதிவுத் துறையின் மீது நம்பிக்கை ஏற்படுத்துதல் மற்றும் வருமான சிதறல்களை ஒழுங்குபடுத்தி அரசின் கருவூலத்திற்கு வர வேண்டிய இனங்களை விடுதல் இன்றி வர வைத்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக பத்திர பதிவுத் துறை வருவாய் வசூலில் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது.

கடந்த நிதி ஆண்டில் இது வரை இல்லாத அளவில் 17,253 கோடி ரூபாய் வசூல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டது.

கடந்த ஆண்டில் ஜூலை மாத முடிவு வரை வசூலிக்கப்பட்ட மொத்த வருவாயைவிட நடப்பு ஆண்டின் ஜூலை மாத முடிவில் அதிக வருவாய் வசூலிக்கப்பட்டு பதிவுத்துறை நடப்பு நிதியாண்டிலும் சாதனை படைத்துள்ளது.

கடந்த நிதி ஆண்டில் 31.07.2022 வரை வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 5,539.06 கோடி ஆகும்.

நடப்பு ஆண்டில் நேற்று வரை அதாவது 31.07.2023 வரை பத்திர பதிவுத்துறையில் வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 5,611.47 கோடி ரூபாய் ஆகும்.

இவ்வகையில் வரலாற்றுச் சாதனை படைக்கப்பட்டதாக கருதப்பட்ட கடந்த ஆண்டு சாதனையைவிட நடப்பு ஆண்டில் நடப்பு மாதத்தில் பத்திரப் பதிவுத் துறை அதிக வருவாய் ஈட்டி கடந்த ஆண்டு சாதனையைக் கடந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அரசு வணிக வரி மற்றும் பதிவுத்துறைச் செயலர் தெரிவித்துள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பாரா பேட்மிண்டன் விளையாட்டு வீரர் எம்.எஸ்.சுதர்சன் அவர்களுக்கு, மேற்கு ஆஸ்திரேலியா பாரா பேட்மிண்டன் போட்டியில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூபாய் 3.20 லட்சம் நிதியுதவியினை சென்னை முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (1.08.2023) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கனடா நாட்டில் தமிழ்நாடு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஒட்டாவா மாகாணத்தில் உள்ள கனடா நாட்டின் வெளியுறவு விவகாரத்துறை துணை அமைச்சர் திருமதி. காத்தலீன் டோனாவூ மற்றும் கனடா நாட்டின் வேளாண்மைத் துறை உயர் அலுவலர்களுடன் கலந்துரையாடினார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி தமிழ்நாடு அரசின் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தா தேவி ஆகியோர் கலந்து கொண்டனர்.